# பரத நாட்டியம்

## வாசிப்புத் துணை நூல்

# தரம் 9

**(2018ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கானது)**

அழகியற்கல்வித் துறை
மொழிகள், மானுடவியல் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம
இலங்கை
www.nie.lk
info@nie.lk

**வாசிப்புத் துணை நூல்**
**பரத நாட்டியம்**
**தரம் 9**

தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம
இலங்கை
முதற் பதிப்பு : 2018

அழகியற்கல்வித் துறை
மொழிகள், மானுடவியல் சமூக விஞ்ஞானபீடம்
தேசிய கல்வி நிறுவகம்.
மஹரகம
இலங்கை.

இணையத்தளம் : www.nie.lk
மின்னஞ்சல் : info@nie.lk

பதிப்பு:
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம
இலங்கை.

# அறிமுகம்

இலங்கைப் பாடசாலை முறைமையில், மையப் பாடங்களாக அதாவது பிரதான பாடங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள, தாய்மொழி, கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்காக நீண்டகாலமாகப் பாடத்திட்டத்துக்கு இணையாக ஆசிரியர் வழிகாட்டியும் (Teachers' Guide), பாடநூலும் (Text Books) பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. அதற்கமைய ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்களுக்கும், பாடநூலை மாணவர்களுக்கும் வழங்கி மாணவர்களது அறிவுக் கண்களைத் திறக்கும் முயற்சியில் அனைவரும் ஈடுபட்டு வருகின்றனர்.

அழகியற் பாடமானது அறிவை மாத்திரமன்றி நற்பண்புகளையும், நன்மனப்பாங்குகளையும் உடைய திறன்களை வளர்ப்பதில் பெரிதும் பங்களிப்புச் செய்கின்றது. மனிதன் நற்பண்புடையவனாகும்போது அவனது நடத்தை மனித வர்க்கத்தின் இருப்புக்கும், சூழலினதும் இயற்கையினதும் இருப்புக்கும் சாதகமாக அமையும். அறிவும் நற்பண்புகளும் கொண்ட மாணவனையே இன்றைய சமூகம் வேண்டி நிற்கின்றது. அவ்வாறான ஒரு மனிதனை உருவாக்குவதற்கு அழகியற் பாடத்தையும் ஒரு பிரதான பாடமாகக் கருதிச் செயற்படுவது பொருத்தமானது. அதனை உணர்ந்து இப்பாடத்தின் மேம்பாட்டுக்காக நீண்ட காலமாகச் செயற்பட்டுவரும் நாம், மையப் பாடங்களை மட்டுமல்லாது இப்பாடத்துக்கும் பாடநூல்கள் தயாரிக்கப்படுவதன் அவசியத்தை எடுத்துக் காட்டுகிறோம். இது ஒரு பிரதான பாடம் அல்லாதபோதும், ஆசிரியரது கற்பித்தற் பணிக்குத் துணையாவதற்கான ஒரு கைந்நூலாக இவ்வாறான ஒரு மேலதிக வாசிப்பு நூலைக் கல்வி முறைமையில் அறிமுகஞ் செய்வதற்கான வாய்ப்புக் கிடைத்தமை குறித்து மகிழ்ச்சியடைகின்றேன். இந் நூல் மாணவர்களுக்கு வழங்கப்படும் பாடநூலுக்கு ஒப்பான ஒன்றல்ல. எனினும், ஆசிரியர்க்கும் மாணவர்க்கும் வலுவூட்டத்தக்க, தேசிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட, ஒரு வளமாகும். மேலும் நாடெங்கிலும் இப்பாடவிடயங்கள் தொடர்பான ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கும் இது துணையாகும்.

வகுப்பறைக்கு வலுவட்டுவதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள இக் கற்றல் - கற்பித்தல் வள நூலைக் கல்வி முறைமையில் அறிமுகஞ் செய்வதன் மூலம் அடைய எதிர்பார்க்கும் சிறப்பான பேறுகள் வருமாறு:

1. ஆசிரியர்களுக்குத் தேவையான பாடவிடயங்கள் எல்லாவற்றையும் ஒன்று திரட்டி வழங்குவதன் மூலம் ஆசிரியது வினைத்திறனை மேம்படுத்தல்.
2. ஆசிரியர் வழிகாட்டியில் விரிவாக இடம் பெற்றுள்ள பாடவிடயங்களை மேலும் விரிவாக முன்வைத்தல்.
3. ஆசிரியர் வழிகாட்டிக்குக் குறை நிரப்புதலாக அமைதல்.
4. கருத்து வேறுபாடுகளுக்கு உள்ளாகத்தக்க பாடவிடயங்கள் தொடர்பாகத் தேசிய ரீதியில் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்குத் தேவையான திட்டவட்டமான விடயங்களை/ தர்க்கங்களை முன்வைத்தல்.
5. பாடவிடயங்களின் சமநிலை மற்றும் திட்டவட்டமான வரையறைகளை முன்வைத்தல் மூலம் மதிப்பீட்டுப் பணிகளை இலகுபடுத்தல்.
6. ஆசிரியரது அறிவை, பாடத்திட்டத்துக்கு அப்பாலும் விரிவுபுடுத்தி, பாடவிடய அறிவு தொடர்பான தன்னம்பிக்கையை உறுதிப்படுத்தல்.
7. ஆசிரியர்கள் மாணவர்கள் இரண்டு தரப்பினருக்கும் கற்றல் - கற்பித்தற் செயன்முறையை அர்த்தமுள்ள இனிய அனுபவமாக்குதல்.

உரிய ஒரு கற்றல் வளமாகிய இது, எமது நாட்டு மாணவ சந்ததியின் அறிவையும் நற்பண்புகளையும் வளர்ப்பதற்கான இனிய கற்றற் சூழலை உருவாக்குவதற்கும் ஆசிரியர்க்குத் துணையாக அமையும். ஆசிரியர்களாகிய உங்களது செயலூக்கமும் அறிவாற்றலும் மென்மேலும் விருத்தியடையட்டும். மேலும் சமகால மாணவ மாணவியர்க்கு அழகியற் பாடக் கற்றல் கற்பித்தலானது ஓர் இனிய அனுபவமாக அமையட்டும் எனவும் பிரார்த்திக்கின்றேன்.

**சாஸ்திரபதி சுதத் சமரசிங்ஹ**
பணிப்பாளர் (அழகியற் கல்வித் துறை)
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம.

## பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

கற்றலானது தொடர்ச்சியான கணிப்பீட்டுக்கு உட்பட்டு வருகின்றது. உயர்ந்த அடைவு மட்டத்தைப் பெறுவதற்குப், பரந்தளவு அனுபவங்கள் கிடைத்தல் வேண்டும். அவ்வாறு பரந்தளவு அனுபவங்களுடன் உயர்ந்த கணிப்பீட்டைப் பெறுவோர் அதிகளவு மகிழ்ச்சியடைவர். இதன் பொருட்டு உரிய நபர்கள், இடங்கள், பொருள்கள் மற்றும் சூழ்நிலைகள் கிடைத்தல் அவசியமாகும்.

பரதநாட்டியத்தைப் பயிலும் மாணவர்களின் கற்றல் அனுபவங்களை விரிவடையச் செய்வதற்காக, மேலதிக வாசிப்பு நூலைத் தயாரிக்க முடிந்தமையையிட்டுத் தேசிய கல்வி நிறுவகம் மகிழ்ச்சியடைகின்றது. இதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட அனைவருக்கும் எமது நன்றிகள் உரித்தாகின்றன.

மாணவர் சமூகம் மேற்படி மேலதிக வாசிப்பு நூலைப் பயன்படுத்தி, அந்நூலில் காணப்படும் ஏனைய அறிவு மூலங்களையும் தமதாக்கிக் கொண்டு உயர்ந்த அடைவுமட்டத்தை நோக்கிச் செல்ல முடியும். இதற்கிணங்க மாணவர்கள், ஆசிரியர்கள், மற்றும் பெற்றோர்கள் உட்பட அனைவரும் இது குறித்துக் கவனம் செலுத்துதல் வேண்டும். மேற்படி மேலதிக வாசிப்பு நூலை மென்மேலும் அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான ஆலோசனைகளை அனைவரிடமும் எதிர்பார்க்கின்றோம். பிள்ளைகளின் கற்றல் அனுபவங்களை விரிவுபடுத்துவதற்குத் தேவையான சிறந்த சூழல் ஏற்பட வேண்டும் எனப் பிராத்திக்கின்றேன்.

**கலாநிதி மாம்புல்கொட சுமணரத்ன தேரர்**
பிரதிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானிடவியல், சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்.

# முன்னுரை

புதிய சவால்களை எதிர்நோக்கக் கூடியதாகத் தயாரிக்கப்பட்ட புதிய பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட இந்த வாசிப்பு நூல் மாணவர்களின் கற்றல் - கற்பித்தற் செயற்பாட்டை இலகுபடுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்படுகிறது.

"பழையன கழிதலும் புதியன புகுதலும்" என்பது கலைகளுக்கும் பொருந்தி வருவதே. அந்த வகையில் புதிய சிந்தனைகளுடன் தயாரிக்கப்பட்டு 2007ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படும் பாடத்திட்டமானது பல புதிய அம்சங்களை உள்ளடக்கியதாக நாட்டில் இனச் சமத்துவத்துடனும் ஒற்றுமையுடனும் வாழும் புதிய சமுதாயத்தை உருவாக்கும் நோக்குடன் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

புதிய சிந்தனையுடன் புதிய நாளொன்றுக்காகக் காத்திருக்கும் மாணவர்களிடையே சிந்தனைத் தடங்கல்கள் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதை நோக்காகக் கொண்டு இந்நூல் அறிமுகப்படுத்தப்படுகிறது. சிறியளவு வளங்களில் பெருமளவு பயன்பெறவேண்டியது இன்றைய சமுதாயத்தின் நிலையாய் இருப்பினும் இந்நூல் மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் கற்றல் - கற்பித்தற் செயற்பாட்டில் பெருந்துணை புரியும் ஒரு சாதனமாகும்.

திருமதி.நிஷாந்தராகினி திருக்குமரன்,
செயற்றிட்டத் தலைவர்,
அழகியற்கல்வித் துறை,
தேசிய கல்வி நிறுவகம்,
மஹரகம.

# கலைத்திட்டக் குழு

| | | |
|---|---|---|
| ஆலோசனையும் வழிகாட்டலும் | : | கல்விசார் அலுவல்கள் சபை,<br>தேசிய கல்வி நிறுவகம். |
| பாட நிபுணத்துவ ஆலோசனை | : | திரு. சுதத் சமரசிங்ஹ,<br>பணிப்பாளர் - அழகியற்கல்வித் துறை. |
| பாட இணைப்பாக்கம் | : | திருமதி. நிஷாந்தராகினி திருக்குமரன்,<br>செயற்றிட்டத் தலைவர்,<br>அழகியற்கல்வித் துறை. |
| எழுத்தாளர் குழு<br>(உள்வாரி) | : | திருமதி. நிஷாந்தராகினி திருக்குமரன்,<br>செயற்றிட்டத் தலைவர்,<br>அழகியற்கல்வித் துறை. |
| (வெளிவாரி) | : | திருமதி.தேவகுமாரி யோகேந்திரன்,<br>ஆசிரியை,<br>யா /தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை<br>மகா வித்தியாலயம்.<br><br>திருமதி.சியாதா ஆனந்தஜோதி,<br>ஆசிரியை,<br>யா /கோண்டாவில் இராமகிருஷ்ண<br>மகா வித்தியாலயம். |
| மொழி மேற்பார்வை | : | திரு.எஸ். செல்வகுமார்,<br>ஆசிரியர்,<br>யா /பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப்<br>பாடசாலை. |
| கணினி கோர்ப்பும் வடிவமைப்பும் | : | செல்வி செல்வரஞ்சினி செல்லத்துரை,<br>ஆசிரிய நூலகர்.<br>யா / தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை<br>மகா வித்தியாலயம். |
| அட்டைப்பட வடிவமைப்பு | : | திரு. ரவீந்ர தேநுவர. |

## உள்ளுறையாக


| | |
|---|---|
| அறிமுகம் | iii |
| பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | iv |
| முன்னரை | v |
| கலைத்திட்டக்குழு | vi |
| உள்ளுறையாக | vii |
| | |
| டோல்கி, உடுக்கு, ஹார்மோனியம், சல்லாரி, நாதசுரம், தவில், பறை படங்கள் | 01 - 04 |
| தத்தெய்தாம் தாளம் 4, 5 கார்வைகளுடன் | 05 |
| அடவு | 06 - 07 |
| கோர்வை | 08 |
| தீர்மானம் | 09 |
| எடுப்பு | 10 |
| முத்திரை | 11 |
| விநியோகம் | 11 |
| சொற்கட்டு | 12 |
| தஞ்சைநால்வர் | 13 - 15 |
| காக்கைச் சிறகினிலே | 16 |
| ஓடிவிளையாடு பாப்பா | 17 - 18 |
| தேவஹஸ்தம் | 19 |
| நவக்கிரக ஹஸ்தம் | 20 |
| ஜாதி ஹஸ்தம் | 21 |
| தாஹத்த ஜெம்தரி தா | 22 |
| தாஹத்த ஜெம்தரி தா - நாட்டியச் சொற்கட்டு | 23 |
| திதிதெய் | 24 |
| தெய் தெய் திதிதெய் | 25 |
| நாட்டிய நாடகப் பின்னணி | 26 |
| சபா லக்ஷணம், சபையின் தன்மை | 27 |
| சபாமண்டபம் | 28 |
| சபா நாயக லக்ஷணம் | 29 |
| அலாரிப்பு லக்ஷணம் | 30 |
| கிண்கிணி லக்ஷணம் | 31 |
| மண்டியடவு | 32 |
| ததிங்கிணதொம் | 33 |
| ததிங்கிணதொம் - நாட்டியச் சொற்கட்டு | 34 |
| கண்டிய நடனம் | 35 - 37 |

**தேர்ச்சி 1.0** :- சூழலைஇரசித்துத் தமது இரசனையை வெளிப்படுத்துவார்.


**தேர்ச்சி மட்டம் 1.1** :- கிராமிய நடனங்களுக்குரிய இசைக்கருவிகளை நயந்து வெளிப்படுத்துவார்.

**செயற்பாடு 1.1.1** :- கிராமிய இசைக்கருவிகளான டோல்கி, உடுக்கு, ஹார்மோனியம்,சல்லாரி, நாதசுரம், தவில், பறை, ஆகியவற்றின் இசையினை நயந்து வெளிப்டுத்துவோம்.

# டோல்கி



## உடுக்கு



## ஹார்மோனியம்




சல்லாரி



நாதசுரம்



தவில்



பறை





**தேர்ச்சி 4.0 :-** தென் இந்திய சாஸ்திரிய நடனங்கள், இலங்கையின் சாஸ்திரிய, கிராமிய நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.2 :-** பரதநாட்டியத்தின் அடிப்படை அடவுகட்குரிய இசைக்குறியீட்டினை அறிந்து கூறுவார்.

**செயற்பாடு 4.2.1 :-** தத்தெய்தாம் அடவுகளைத் தாள அங்கக் குறியீட்டில் எழுதுவோம்.

## தத்தெய் தாம் 4ஆவது 5 ஆவது - ஆதி தாளம்

| $1_4$ | | | | 0 | | 0 | |
|---|---|---|---|---|---|---|---|
| 1வது அட்சரம் | 2வது அட்சரம் | 3வது அட்சரம் | 4வது அட்சரம் | 5வது அட்சரம் | 6வது அட்சரம் | 7வது அட்சரம் | 8வது அட்சரம் |
| **1ம் காலம்** | | | | | | | |
| தத், ;<br>தத், ; | தெய் , ;<br>தெய் , ; | தாம் ;<br>தாம் ; | ;; /<br>;; / | தித் , ;<br>தித் , ; | தெய் , ; /<br>தித் , ; / | தாம் ;<br>தெய் , ; | ;; //<br>;; // |
| **2ம் காலம்** | | | | | | | |
| தத்,தெய், | தாம் ; | தித்,தெய், | தாம் ; / | தத்,தெய், | தாம் ; / | தித்,<br>தித், | தெய்,;// |
| **3ம் காலம்** | | | | | | | |
| தத்தெய்<br>தாம் | தித்தெய்<br>தாம் | தத்தெய்<br>தாம் | தித்தித்<br>தெய் / | தத்தெய்<br>தாம் | தித்தெய்<br>தெய்தாம்/ | தத்தெய்<br>தாம் | தித்தித்தெய்// |

**தேர்ச்சி 4.0 :- தென் இந்திய சாஸ்திரிய நடனங்கள் இலங்கையின் சாஸ்திரிய, கிராமிய நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார்.**

**தேர்ச்சி மட்டம் 4.3 :- பரதநாட்டியத்தின் எண்ணக்கருக்களை அறிந்து கூறுவார்.**

**செயற்பாடு 4.3.1 :- அடவு, கோர்வை, தீர்மானம், எடுப்பு, முத்திரை, விநியோகம், சொற்கட்டு முதலிய எண்ணக்கருக்களை அறிந்து கொள்வோம்.**

## அடவு

நாட்டியத்தின் பலவித அங்க அசைவுகளின் தொகுப்பை அல்லது கூட்டுச் சேர்க்கை அசைவுகளைக் குறிப்பிடுவதே அடவு என்று சொல்லப்படும். அதாவது இசையில் பயிற்சி வடிவங்களான சரளி, ஜண்டை வரிசைகள் இருப்பதைப் போல, நடனத்திலும் பயிற்சி, ஆடல் அசைவு வடிவங்களாகத் திகழ்வது அங்க அசைவு சேர்க்கைகள் என்னும் அடவுகளாகும். இந்த அடவுகள் உணர்வுகளை அல்லது குறிப்பை உணர்த்தும் சைகையாக விளங்குகின்றன. இந்த சைகைகளின் மூலம் ஆட்டத்தில் பல்வேறு மாறுதல்களை உண்டாக்கி அதில் ரசனையையும் பாவத்தையும் ஏற்படுத்தி, ஜதி சொற்கட்டுகளுடன் ஆடப்பெறுகின்றன.

உதாரணமாக : தைய தா தா தைய தா
தைய தா தா தைய தா

போன்ற சொற்களுக்கு நடன சமிக்ஞைகள் கையாளப்படுகின்றன. எனவே அடவுகளே ஒரு நாட்டியத்தின் அபிநயத்திற்கு அடித்தளமிடும் சைகைகளாக விளங்குகின்றன. இதில் பெண்கள் ஆடும் ஆட்டம் லாசியம் என்றும் ஆண்கள் ஆடும் ஆட்டம் தாண்டவம் என்றும் சொல்லப்படும். லாசியம் என்பது பெண்மையின் மென்மையைப் புலப்படுத்தவல்லது. தாண்டவம் என்பது ஆண்மையின் கம்பீரத்தை வெளிப்படுத்தவல்லதாகக் காணப்படும். லாசியத்திற்கும் தாண்டவத்திற்கும் தனித்தனி அசைவுகள் இல்லை. அவைகளைக் கையாளும் முறையில்தான் வேறுபாடுகள் உள்ளன. இந்த அங்க அசைவுகள் உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்தவும், தகவல் பரிமாற்றத்தை வெளிப்படுத்தவும் போன்ற நிலையில் இடம்பெறுகிறது. ஒரு நாட்டியத்தின் சிறப்பையும் உயர்வையும் நிர்ணயிக்கவல்லது அடவுகளே ஆகும்.

நாட்டியக் கலையின் சிறப்பிற்கு முக்கியக் காரணகர்த்தாக்களாக விளங்குபவர்கள் நட்டுவனார் ஆவார்கள். இவர்களே நாட்டியத்தை இயக்கும் சிற்பிகளாகத் திகழ்பவர்கள் ஆவார்கள். இவர்களுடைய ஆற்றலின் திறமையைக் கொண்டே நாட்டியம் சிறப்புப் பெறுகிறது. இவர்களுடைய நட்டுவாங்கத்தின் ஜதிகள், மிருதங்கத்தில் தாளச் சொற்களை உண்டாக்கி அது நர்த்தகியின் ஆட்டத்தை இயக்குகிறது. பாமரர் பாடும் பாடல் நர்த்தகியின் அங்க அசைவுகளில் பாவங்களைத் தோற்றுவித்து உணர்வையும் குறிப்பையும் வெளிப்படுத்துகிறது. எனவே தாளமும் பாவமும் நாட்டியத்தில் இரு கண்களைப்போல் இயங்குகிறது. நட்டுவனார் இசைக்கேற்ப ஆடும் திறனில் அவரவர் தங்கள் கற்பனைத் திறனைப் புகுத்தி, அங்க அசைவுகளிலும் நளின போக்குகளிலும் காலடி அசைவுகளிலும் ஆடுகளம் அமைக்கின்றனர். இவைகளை மொத்தமாகச் சொல்வோமானால் அடவுகளின் மூலம் நாட்டியத்திற்கு அடித்தளமிடுகின்றனர் என்று சொல்லலாம். அடவு என்பது அங்க அசைவுகளுக்கு ஏற்ப காலடிகளைச் சீராக எடுத்துவைத்து ஆடுவது எனச் சொல்லலாம். இந்த அடவுகளில் அவரவர்களின் கற்பனைத் திறனுக்கேற்ப ஆட்டுவிக்கின்றனர். இப்படி ஆட்டுவிப்பதில் நட்டுவனார் ஒவ்வொருவரும் அவரவர் பாணியில் வழிநடத்துகின்றனர். இந்தப் பாணி அமைப்பு முறையில் நடன, பாவ, அசைவு முறைகள் மாறுபடுமேயன்றி நாட்டிய இலக்கணம் மாறுபடுவதில்லை. இந்த ஆட்ட முறைகளைக்கொண்டே பிற்காலங்களில் தஞ்சாவூர் பாணி, பந்தநல்லூர் பாணி, வழுவூர் பாணி, காஞ்சிபுரம் பாணி என்று தோன்றலாயின. இந்த பாணியின் போக்குகளால் ஆடற்கலை பல வடிவங்களில் மேலும் சிறப்புப்பெறுகிறது என்றே சொல்லலாம்.

இதில் தஞ்சாவூர் அருணாசலம்பிள்ளை. கட்டப்பாபிள்ளை, தண்டாயுதபாணிபிள்ளை, பந்தநல்லூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை, வழுவூர் ராமையாபிள்ளை, காஞ்சிபுரம் எல்லப்பாபிள்ளை போன்றோர் மிகச்சிறந்த நட்டுவனார் ஆவார்கள்.

கி.பி 20 - 21 ஆம் நூற்றாண்டுகளில் திருவிதாங்கூர் சகோதரிகளான லலிதா, பத்மினி, ராகினி போன்றவர்களும் வைஜயந்திமாலா, பத்மாசுப்பிரமணியம் போன்றவர்களும் மிகச்சிறந்த நாட்டிய நர்த்தகிகளாக விளங்குகின்றனர். இவர்கள் நமது நாட்டியக் கலையை உலகெங்கும் எடுத்துச்சென்று நடாத்தி இந்திய திராவிடக் கலையான நாட்டியத்திற்குப் பெரும் புகழும் சேர்த்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கோர்வை

பல அடவுகள் சேர்ந்து வருவதே கோர்வை எனப்படும். இக் கோர்வையில் மென்மையான அடவும் வன்மையான அடவும் சேர்ந்து வரும். இக் கோர்வை எப்போதும் லயத்துடன் அமைந்து இருக்க வேண்டும். இதை ஒரு அங்காரம் என்பர். இதனைப் பூமாலைக்கு ஒப்பிட்டும் கூறுவர். கோர்வைகளை அமைக்கும்போது அடவுகள் இருபக்கமும் ஒரே அளவாக (சமச்சீராக) இருத்தல் வேண்டும். இதனைச் செய்யும்போது கால்களை வன்மையாகவும் கைகளை அழுத்தமாகவும் செய்யவேண்டும். கோர்வைகள் பாட்டின் வன்மை, மென்மைக்கேற்ப அமைய வேண்டும். கோர்வை அமைக்கும்பொழுது முதல் ஆரம்பத்தில் இருந்து படிப்படியாக மூன்றாம் காலத்திற்குக் கூட்ட வேண்டும். கிடதகதரிகிடதொம் அல்லது ததிங்கிணதொம் என்ற சொற்கட்டுகளால் அமைந்த தீர்மானத்துடன் கோர்வை முடிவுபெறும்.

பல பாதபேதங்களும் மண்டலபேதங்களும் முத்திரைகளும் சேர்ந்து அமைவதாகும். தீர்மானங்களில் வருவனவும் கோர்வை எனப்படும்.

கோர்வையானது பாதபேதங்களான மண்டலம், உத்பிலவனம், ப்ரமரி பாதசாரிகா என்பவற்றையும் மண்டல பேதங்களான ஸ்தானகம், ஆயதம், ஆலிடம், ஸ்வஸ்திகம், மோடிதம், சமசூசி, பார்ஷவ சூசி என்பவற்றையும் முத்திரைகளான ஒற்றைக்கை முத்திரைகள் 28, இரட்டைக்கை முத்திரைகள் 24 என்பவை சேர்ந்து அமைந்ததாகும்.

**ஒரு கோர்வையை அமைக்கும்போது கவனிக்கவேண்டிய அம்சங்கள்**

1. பாட்டிற்கேற்ப தாளத்துடன் கோர்வை அமைய வேண்டும்.

2. பாட்டின் மென்மை வன்மைக்கேற்ப கோர்வைகள் அமைய வேண்டும்.

3. காலில் அழுத்தமும் கையில் மென்மையும் காணப்படவேண்டும்.

4. கோர்வையானது மிக அழகானதாகப் பார்ப்பவர்களினால் ரசிக்கப்பட வேண்டுமாயின் முதலில் விளம்ப காலத்தில் (முதலாம்) தொடங்கி மத்திம காலத்தை (இரண்டாம், அடைந்து துரித காலத்தில் (மூன்றாம்) முடிந்தால் கோர்வைகள் மிகவும் அழகாக இருக்கும்.

5. கோர்வையின் இறுதியில் தீர்மானம் (மகுட அடவு) இடம்பெறவேண்டும். அதாவது கிடதக தரிகிட தொம் அல்லது ததிங்கிணதொம் என அமைதல் வேண்டும். ஒன்று அல்லது மூன்று சோடி அல்லது ஐந்து அமைதல் வேண்டும்.

6. கோர்வை செய்யும் போது அடவுகளை ஒழுங்குமுறையில் அமைத்து அதை மனதில் வரிப்படமாக வரைய வேண்டும்.

7. கோர்வையில் ஒரே அடவுகளை திரும்பத் திரும்பச் செய்யாமல் மாறிமாறி வரும்படி அமைக்க வேண்டும்.

8. கோர்வைகள் அமைக்கும்போது இருபக்கமும் நகர்ந்து செய்யக் கூடியதாய் அமைப்பதுடன் (ஒரேயடியாக முன் செல்லாமல் அமைப்பதுடன்) அதாவது எல்லாப் பக்கமும் செல்லக் கூடியதாய் அமைப்பதுடன் (ஒரே அடவை திரும்பத் திரும்பச் செய்யாமல்) அடவுகள் மாறி மாறி வரும்படி அமைத்தால் அழகுபெறும்.

9. வித்தியாசமான திசையில் கோர்வைகளை ஓடிச் செய்ய அழகாக இருக்கும்.

# தீர்மானம்

பரத நாட்டியத்தின் நுட்பமான முடிவே தீர்மானம் ஆகும். அதாவது சொற்கட்டினால் லயத்தோடு கலந்த முடிவுத் துண்டுகளே தீர்மானம் ஆகும். இது ஜதிகளினால் ஆக்கப்பட்டது. இது சிக்கலானதும் அழகானதும் உறுதியானதும் ஆகும். இது கூடுதலான லயப்பிடிப்புடன் இருக்க வேண்டும். உருப்படி அங்கங்களை முடிப்பதற்கு எடுத்துக்காட்டாக அமையும் பகுதியாகும்.

சிக்கலான அடவு தாளஜதி முதலியவற்றால் தொடுக்கப்பட்ட சொற்கட்டு மாலையே தீர்மானம் எனப்படும். களைக் குறிப்பு, முடிவுத் துண்டுகள், நிறுத்தற்குறிகள் என்பவையெல்லாம் ஒன்றையே குறிக்கின்றன. அடவுகள் சுருக்கமாகவும் லயப்பிடிப்புடனும் பிரகாசம் நிறைந்ததாகவும் இருக்க வேண்டும். தீர்மானம் சிறிதாக அல்லது பெரிதாக இருக்கலாம். மூன்று காலங்களிலும் அமைந்திருக்கும். அதாவது விளம்ப காலத்தில் ஆரம்பித்து மத்திம காலத்தை அடைந்து துரித காலத்தில் முடிவடையும்.

மிருதங்க சொற்கட்டுகளுடன் கூடிய ஜதிகளைக் கொண்டு மகுட அடவுகளுடன் முடிவுறும் கோர்வைகளும் தீர்மானம் எனப்படும். இது பாட்டு அல்லது நடனத்தின் முடிவிலோ அல்லது பகுதிகளின் இடையிலோ வரும். தீர்மானம் இன்றி கோர்வை முடிவடைவதில்லை. எப்போதும் தீர்மானம் ''ததிங்கிணதொம்'' , ''கிடதக தரிகிட தொம்'' என்னும் மிருதங்க சொற்கட்டுடன் முடுடிவடையும். இதனையே மிருதங்கத்தில் மோரா என்று கூறுவர்.

உதாரணம் : ததிங்கிணதொம்
கிடதக தரிகிடதொம்

## கிரஹம் (எடுப்பு)

பாட்டு அல்லது ஜதியானது தாளத்தின் எந்த இடத்தில் ஆரம்பிக்கின்றதோ அந்த இடமானது க்ரஹம் அல்லது எடுப்பு எனப்படும். கிரஹத்தில் இரு பிரிவுகள் உள. அவை சமம், விசமம் என்பனவாகும்.

விசமக் கிரஹத்தை அதீதம், அனாகதம் என இரு வகையாகக் கூறியுள்ளனர்.

1. சம எடுப்பு :




பாட்டையோ, ஜதியினையோ தாளத்துடன் ஒரே நேரத்தில் ஆரம்பித்தல் சமஎடுப்பு எனப்படும்.

உ - ம் : 1. ஆடிக்கொண்டார்
2. நடனம் ஆடினார்

2. விசம எடுப்பு :

பாட்டை அல்லது ஜதியை தாளத்தின் தொடக்கத்தில் சேராமல் ஆரம்பித்தல். இது தாளம் தொடங்க முன்னரோ அல்லது தாளம் தொடங்கிய பின்னரோ ஆரம்பித்தலைக் குறிக்கும். இது இரண்டு வகைப்படும் . அவையாவன,

உ - ம் : 1. அதீத எடுப்பு
2. அநாகத எடுப்பு

1. அதீத எடுப்பு :




பாட்டு, ஜதி ஆகியன தாளம் ஆரம்பித்தற்கு முன்பாக ஆரம்பித்தல். ''அதீத'' என்பது முந்திச் சென்றது எனக் கருதப்படும்.

உ - ம் : 1. சிவகாமசுந்தரி
2.

2.அநாகத எடுப்பு :




தாளமானது ஆரம்பித்த பின்னர் இடையே பாட்டினையோ அல்லது ஜதியினையோ ஆரம்பித்தல். (அநாகத எனின் இன்னும் வராத எனக் கருதல்)

உ - ம் : 1. சரவண பவகே
2. திருப்பரங்குன்ற வேலா

## முத்திரை

ஒரு விடயத்தின் பொருளைக் கைகளின் உதவியினால் விளக்குவதே முத்திரை எனப்படும். அதாவது பொருளின் தோற்றம், உருவம், குறி என்பவற்றைக் கைகளினால் விளக்குவதே முத்திரையாகும். இம் முத்திரைகளின் பயன்பாடு நடனத்தில் முக்கியமான இடத்தைப் பெறுகின்றது. இதனால் இம் முத்திரைகள் ''கஜ்தாபினயம்'' என்று அழைக்கப்படுகின்றது. பரத முனிவர் காலத்திற்கு முன்னாலேயே இக் கலை நன்கு வளர்ச்சியடைந்திருக்க வேண்டும். வார்த்தைகள் எதுவும் பேசாமல் கைகளிலுள்ள விரல்களின் பல்வேறு நிலைகளாலும் அசைவுகளாவும் பொருள்பட அபிநயிப்பது இக் கலையாகும்.

நடனத்தில் பிரயோகிக்கும் கைகளை சமஸ்கிருதத்தில் ஹஸ்தங்கள் என்று அழைப்பர். தமிழில் ''முத்திரைகள்'' என்றும் அழைக்கப்படும். இவ் ஹஸ்தங்களை இரண்டாகப் பாகுபாடு செய்யலாம்.

அவையாவன,

1. அபிநய ஹஸ்தம்
2. நிருத்த ஹஸ்தம்

இவ் அபிநய ஹஸ்தம் மேலும் இரண்டாகப் பாகுபாடு செய்யலாம். அவையாவன,

1. ஒற்றைக்கை அல்லது அஸம்யுத ஹஸ்தம்
2. இரட்டைக்கை அல்லது ஸம்யுத ஹஸ்தம்

இவற்றை முறையே இணையாதகை. இணைந்தகை எனவும் கூறலாம். அபிநயக் கைகள் கருத்துக்களைப் புலப்படுத்தவும் நிருத்தக் கைகள் நிருத்தத்திற்கும் பயன்படும். பரதசாஸ்திரம் ஹஸ்தங்கள் பற்றிக் கூறும்போது அஸம்யுத ஹஸ்தங்கள் 29 எனவும், ஹஸ்தஹ்கள் 24 எனவும் கூறுகின்றது.

## விநியோகம்

முத்திரைகளின் உபயோகமே விநியோகமாகும். சில செய்கைகளை முத்திரையின் மூலம் அபிநயித்துக் காட்டுவது விநியோகம் ஆகும். நாட்டியங்களின் உபயோகங்களை விளக்குவதே விநியோகம் ஆகும். ஹஸ்தம், கண், தலை, கழுத்து, பாதம் ஆகியவற்றின் விநியோகங்களைக் குறிப்பிடலாம். அதாவது ஒவ்வொரு முத்திரையையும் பயன்படுத்தி என்னென்ன கருத்துக்களை வெளிப்படுத்தலாம் என்பதே விநியோகம் ஆகும்.

# சொற்கட்டு

அடவுகளுக்கு இருவிதமான சொற்கட்டுகள் பயன்படுத்தப்படும். ஒன்று வகுப்பிலும் மற்றையது அடவுகளை ஜதிகளாகச் சேர்க்கும் போது மேடையில் அவை மிருதங்கச் சொற்கட்டுகளாக உச்சரிக்கப்படும்.

அதாவது கதி, தொனி என்பவற்றுடன் ஒழுங்கமைக்கப்பட்ட சொற்களின் சேர்க்கை சொற்கட்டு எனப்படும். காற்தட்டுக்களினால் ஏற்படும் ஒலிக்கேற்ப சொற்களைக் கொண்டிருக்கும்.

மேலும் சொல்லுக்கட்டு என்பது குருவானவர் பாடம் எடுக்கும்போதும் பின்பு மேடையிலும் உபயோகப்படுத்தும் சொற்கள் எனவும் கருத்துக்கள் இன்றியும் இனிமையாகவும் மிருதங்கத்தில் வாசிக்கப்படும் அமைப்பே சொற்கட்டு ஆகும். அதாவது ஜதியின் உள்ளடக்கம் சொற்கட்டு எனப்படும்.

அடவுகளை அடவுச் சொற்கட்டிலும் ஜதிகளை ஜதிச்சொற்கட்டிலும் தாளவாத்தியங்களின் அடிப்படைச் சொற்களை மிருதங்கச் சொற்கட்டிலும் பொருத்தமான தாளங்களில் அமைத்துக்கொள்ளலாம்.

வகுப்பில் பயன்படுத்தப்படும் தத்தகாரம் (அடவுகளை பயில்விக்கும் போது) ''தைய்யா தை'' , ''தத்தை தாஹா'', ''தையும் தத்தா'', ''தைஹைத்தைஹ'', ''தாதை தைதா'', ''திதி தை'' போன்ற தகார சொற்கட்டுக்களை ஆசிரியர் உபயோகிப்பார்கள். இதே அடவு கோர்வைகள் ஜதிகளாக மேடையில் ஆடப்பெறும்போது மிருதங்க சொற்கட்டுகளாக உச்சரிக்கப்படும். உதாரணமாக ''தத்திதகணக ஜம்'' , ''தடீங்குதத்திதா'', ''கிடதக தரிகிடதோம்'', ''ததிங்கிணதோம்'' ,''தாங்கிடதக தரிகிடதகதோம்'', ''ஜம்ஜம் தகணம்'' போன்ற இனிமையான சொற்கட்டுகள் உச்சரிக்கக் கடினமாக இருப்பினும் கேட்க நன்றாக இருக்கும். இச் சொற்கட்டுகளை நட்டுவனாரே உச்சரிக்கக் கடினமாயிருப்பினும் நட்டுவனாரே உச்சரிப்பார். நாட்டியம் பயில்வோரும் கற்றுக்கொள்ளுதல் அவசியம்.

ஆனால், மாணவி அவைகளை உதட்டசைவோடு முணுமுணுத்துக்கொண்டு ஆடினால் நன்றாக இராது. வெறும் தத்தகாரமாக உதட்டை அசைத்தால், புன்சிரிப்போடு ஆடினாலும் அந்த முகபாவம் கெடாது. அடவுகள் ஒவ்வொன்றிற்கும் வழக்கமாகச் சொல்லப்படும் தத்தகாரச் சொற்களை மாற்றிச் சொல்லாமல் பழகிக்கொள்ள வேண்டும். நன்கு தேர்ச்சிபெற்ற பிறகு ஜதிகள் கற்று ஆடும்போது மேடைக்கான சொற்கட்டுக்களையும் பாடம் செய்து தாளத்துடன் உச்சரிக்கக் கற்றுக் கொள்ளுதல் அவசியம்.

நடனத்தில் மிகவும் முக்கியமான ஜதிகளின் சொற்கட்டுகளை நாட்டிய உருப்படியில் இடையிடையே நட்டுவனார் சொல்லும் விதத்திலிருந்து நாட்டியத்தின் அழகும் தரமும் அதிகரிக்கும்.

**தேர்ச்சி 5.0 :- நடனங்களின் கலாசாரப் பண்பாட்டு, வரலாற்றுப் பின்னணியை அறிந்து கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 5.1 :- கலைவளர்த்த கலைஞர்களின் வரலாற்றுப் பின்னணியை ஆராய்ந்து அறிந்து கூறுவார்.**

**செயற்பாடு 5.1.1 :- கலைவளர்த்த கலைஞர்களில் தஞ்சை நால்வரின் வரலாற்றுப் பின்னணியை அறிந்து கொள்வோம்.**

## தஞ்சை நால்வர்

காலத்தின் அழிவுக் கரங்களில் இருந்து அதிர்ஷ்டவசமாக நம்கலைச் செல்வமாகிய பரத நாட்டியக்கலை தப்பி வந்துள்ளது. பற்றும், பக்தியும் திறமையும் படைத்த ஒருசில நட்டுவாங்கப் பெரியோர்களின் புண்ணியத்தால் அக்கலை நலிவடையாது வளர்ந்துள்ளது.

அக் காலத்தில் வெறுங் கூத்து வடிவில் நிலவிய நாட்டியக் கலையை இன்றுள்ள பாணியில் உருவாக்கிய பெருமை, கலைக்காக வாழ்ந்து மறைந்த மேதைகளையே சாரும். அவர்கள் தான் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தஞ்சையில் வாழ்ந்தவர்களும் தஞ்சை திருவாங்கூர், மைசூர் சமஸ்தானங்களில் வித்வான்களாக விளங்கியவர்களுமான தஞ்சை பொன்னையா, சின்னையா, சிவானந்தம் வடிவேலு ஆகிய நான்கு சகோதரர்களும் ஆவர். இவர்களின் தந்தையார் பெயர் சுப்பராயன். சுப்பராயன் நட்டுவனாரும், அவரது நான்கு குமாரர்களும், செங்கணார் கோயிலில் பூமாலை தொடுத்தும் தேவாரம் பாடியும் சிவத்தொண்டு புரிந்து வந்தார்கள். ஒருநாள் தஞ்சை மன்னர் துளஜா மகாராஜா செங்கணார் கோயிலுக்குத் தரிசனத்திற்கு வந்தபோது, சுப்பராய நட்டுவனார், பொன்னையா முதலானவர்களின் இசைப் பெருக்கில் மனம் பறிகொடுத்தவராய் இவர்கள் ஐவரையும் தஞ்சைக்கு அழைத்து வந்து பிருகதீஸ்வரர் கோயிலில் தேவாரப் பணியும், நட்டுவாங்கப் பணியும் செய்யுமாறு பணித்து ஆதரவு நல்கினார். இவர்கள் சங்கீதத்தில் மிகுந்த பாண்டித்தியம் பெற தஞ்சை மன்னர் வேண்டிய உதவிகளைச் செய்தார்.

பொன்னையா சகோதரர்களின் இனிய சாரீரத்தில் மனம் மகிழ்ந்த மகாராஷ்டிர மன்னர், அக் காலத்தில் மிகுந்த புகழோடு வாழ்ந்திருந்தவரும் சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவருமான ஸ்ரீமுத்துஸ்வாமி தீட்சிதர் அவர்களிடம் இவர்களைச் சங்கீத சிட்சை பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்தார். அதன்படி சகோதரர்களும், ஸ்ரீமுத்துஸ்வாமி தீட்சிதரிடம் தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளிலும் விசேட பாண்டித்தியம் பெற்றார்கள். தம் மாணவர்களின் தீட்சண்யத்தைக் கண்டு மகிழ்ந்த அவர் அரச சபையிலே பொன்னையா சகோதரர்களின் அரங்கேற்றம் நடைபெற ஏற்பாடு செய்தார்.

பொன்னையா சகோதரர்களின் இசைவல்லமை அரங்கேற்றத்தன்றே மன்னர் மனதைக் கவர்ந்தது. மகிழ்ச்சியில் திளைத்த அரசர், ஸ்ரீமுத்துஸ்வாமி தீட்சிதரைப் பாராட்டிக் கௌரவித்து, பணமுடிப்பும் (ரூபா 5000/= ) நவரத்தினமாலையும் பரிசாகக் கொடுத்தார். மாணவர்களான பொன்னையா சகோதரர்கள் அந்த அரங்கேற்ற மண்டபத்தில் தங்கள் குருநாதருக்கு ‘‘நவரத்தினமாலா’’ என்ற ஒன்பது கீர்த்தனைகளை ஒரு ஸ்துதியாகச் செய்து அதனைப் பாடிக் காணிக்கையாகச் செலுத்தினர். இப் பாடலைக் கேட்ட தீட்சிதர் அவர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை. தம்மை ஒத்தவர் தமது மாணவர்கள் எனப் பாராட்டி அசீர்வதித்தார். ‘‘நவரத்தினமாலா’’ என்ற ஒன்பது கீர்த்தனைகளையும் ‘‘குருகுக’’ என்ற முத்திரையுடன் கூட தம் குலதெய்வமாகிய பிருகதீஸ்வரரையும் பிருகன்நாயகியையும் சம்பந்தப்படுத்திப் பாடி இருக்கின்றார்கள். அதில் ‘‘குருகுக தாஸன்’’, ‘‘குருகுக பக்த’’, ‘‘குருகுக மூர்த்தி’’ எனப் பல முத்திரைகள் வருகின்றன. தங்கள் குருவான தீட்சிதரவர்கள் முருகப் பெருமான் அருள் பெற்றுத் திகழ்ந்தவராதலால், சுப்பிரமணியக் கடவுளையும் குருவையும் ‘‘ஒரே அம்ஸம்’’ என்று பக்தி பூர்வமாகப் பாவித்து உணர்ந்து, உருகி ‘‘குருகுக’’ என்று முத்திரையை இக் கீர்த்தனங்களிற் கையாண்டார் என்று ஒரு கதை உண்டு.

தஞ்சை அரச சபையில் கீர்த்தியுடன் சகோதரர்கள் வாழ்ந்து வருகையில் தான் பொன்னையாவிற்கு நாட்டியத்தைக் கச்சேரி பாணியில் எந்த இடத்திலும் எப்போதும் நடத்தக் கூடிய விதத்தில் அமைக்க வேண்டுமென்ற கருத்துத் தோன்றியது. அதன் பிரகாரம் மிகவும் முயற்சி செய்து அதற்கான இலக்கணங்களையும் ஆரம்பப் பாடங்களையும் தயாரித்தார். எப்படிச் சங்கீதத்திற்கு ஆரம்பப் பாடமாக சரளி, ஜண்டை, அலங்காரம் என்பன அமைந்தனவோ அவ்வாறே நாட்டியத்திற்கு ஆரம்பப் பாடமாக அடவுகளைப் பத்தாக வகுத்தார். அவை தட்டு அடவு, நாட்டு அடவு, குதித்து மெட்டு அடவு, ஜாதி அடவு, தட்டு மெட்டடவு, நடை அடவு, முடிவடவு என்பனவாம். இந்தப் பத்து வகை அடவுகளையும் ஒவ்வொன்றிலும் பன்னிரண்டு வகை செய்து மொத்தம் 120 அடவுகளாக வகுத்தார். பின்பு அலாரிப்பு, ஜதிஸ்வரம், சப்தம், பதவர்ணம், சுரஜதி, பதம், இராகமாலிகை, சுலோகம், தில்லானா என அட்டவணைப்படுத்தினார். கச்சேரிக்கு வேண்டிய அலாரிப்பு, ஜதிஸ்வரம், சப்தம் என்பவற்றைப் பல தாளங்களிலும் இராகங்களிலும் இயற்றி அநேக பதவர்ணங்களையும் சுரஜதிகளையும் நாயக, நாயகி பாவத்தோடு தமிழிலும் தெலுங்கிலும் அமைத்துப் பாடினார். அதற்கு வேண்டிய தீர்மானங்களையும் இயற்றியதோடு, இராக மாலிகைகள், தில்லானா முதலிய பல உருப்படிகளையும் செய்தார். பதங்களையும் இயற்றினார். தாங்கள் வகுத்த பாணியை முதலில் இரு பெண்களுக்குக் கற்பித்தனர். பின்னர் தம் குருநாதர் முன்னிலையில், அரச சபையில் அரங்கேற்றினார்கள். ஸ்ரீ தீட்சிதர் அவர்கள் அன்றைய கச்சேரியைப் பார்த்து வியந்து “சங்கீதத்திற்குப் புரந்தர தாஸர் வழிகாட்டி” நாட்டியத்திற்கு என் மாணவர்கள் வழிகாட்டி என்று கூறியதோடு, அரசரைக் கொண்டு சகோதரர் நால்வருக்கும் “சங்கீத சாகித்ய பரத சிரேட்டர்” என்னும் பட்டத்தை அளிக்கச் செய்தார். பொன்னையா சகோதரர்கள் வகுத்த பாணியிலேயே நாட்டியக் கச்சேரிகள் தம் பிரதேசத்திலுள்ள எல்லா ஆலயங்களிலும் நடைபெறுவதற்கான வழிவகைகளையும் செய்தார். துளஜா மகாராஜாவிற்குப் பின் சரபோஜி மகாராஜாவும் நாட்டியக் கலைக்குப் பேராதரவு தந்து, தன் அரண்மனையிலேயே சிலம்பக் கூடம் அமைத்துப் பலரைத் தயார் செய்ய ஆதரித்தார்.

நால்வரது புகழ் திருவாங்கூர், மைசூர் முதலிய அரசுகளிலும் பரவியதால் அங்கு சமஸ்தான வித்வான்களாக அமர்த்தப்பட்டார்கள். அவர்கள் கோட்டையர் சிவக்கொழுந்து தேசிகர் இயற்றிய சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகத்தையும் மன்மத விலாஸத்தையும் நாட்டிய நாடகமாக அமைத்து அதைப் பிருகதீஸ்வரர் ஆலயத்தில் அரங்கேற்றினார்.

சின்னையா அவர்கள் மைசூர் சமஸ்தானத்தில் வித்துவானாக இருந்து அங்கு சாமுண்டீஸ்வரி பெயரிலும் தன்னை ஆதரித்த அரசர்களான கிருஷ்ணராஜ உடையார், சாமராஜ உடையார் பெயரிலும் வர்ணங்களையும் கீர்த்தனைகள், தில்லானாக்கள் முதலானவற்றையும் இயற்றியுள்ளார்.

சிவானந்தம், தன் குலதெய்வத்தின் பெயரிலும், தன்னை ஆதரித்த சரபோஜி மகாராஜா பெயரிலும் பல வர்ணங்களையும் தமிழ்ப் பதங்கள், ஜாவளிகள் முதலியவற்றையும் இயற்றிப் புகழடைந்தார். நடிகைகளுக்கும் நாட்டியம் கற்பிப்பதில் சிறந்தவரெனப் போற்றப்பட்டார்.

வடிவேலு அவர்கள் திருவாங்கூர் சுவாதித் திருநாள் மகாராஜாவின் சபையில் வித்துவானாக அமர்ந்து பிரபல்யம் அடைந்தார். இவர் மேல்நாட்டு இசைக் கருவியான பிடில் வாத்தியத்தை, மேல்நாட்டுப் பாதிரியார் ஒருவரிடம் வாசிக்கக் கற்று அதனைத் தம் கர்நாடக சங்கீத முறையில் முதன் முதலில் பிடிலில் வாசித்ததோடு மட்டுமல்லாமல், சங்கீதக் கச்சேரிக்குப் பக்கவாத்தியமாக வைத்துக் கொள்ளலாம் எனவுங் கூறி, தாமே பக்கவாத்தியமாக வாசித்துக் காட்டிப் பெரும் புகழடைந்தார். இதற்காக சுவாதித் திருநாள் மகாராஜா அவர்கள் கொடுத்த பிடிலும், யானைத் தந்தத்திலான பெட்டியும் 1834ஆம் ஆண்டில் பரிசாகக் கிடைக்கப் பெற்றார். இவரும் சகோதரர்களைப் போல பல தான வர்ணங்கள், பத வர்ணங்கள் என்பவற்றை பத்மநாப சுவாமி பெயரிலும் தஞ்சை அரசர்கள் பெயரிலும் இயற்றினார். பல ஜதிஸ்வரம், சுரஜதி, ஜாவளி, பதம், தில்லானா ஆகியவற்றைத் தெலுங்கு மொழியில் இயற்றியுள்ளார்.

பொன்னையா சகோதரர்கள் திருவாங்கூர் சமஸ்தானத்தில் ஸ்ரீ சுவாதித் திருநாள் மகாராஜாவின் அரச சபையில் இசைக் கச்சேரிகளை நடத்தி வந்தார்கள். பின்பு மீண்டும் தஞ்சைக்கு அரசரின்

விருப்பத்திற்கிணங்க வந்தனர். ஆனால் வடிவேலு நட்டுவனார் மட்டும் திருவாங்கூரிலேயே தங்கிவிட்டார்.

தஞ்சை வந்து சேர்ந்த பொன்னையாவும், சின்னையாவும் தமக்குக் கிடைத்த வருமானத்தில் தண்ணீர்ப் பந்தல் கைங்கரியத்திற்கும், திருத்தேரன்று அன்னதானம் செய்வதற்கும் செலவு செய்தனர். பல மாணவர்களுக்கு இசை, நடனம் என்பவற்றைக் கற்பித்து வித்துவான்களாக்கி எல்லா ஆலயங்களிலும் அவர்கள் நாட்டியக் கைங்கரியம் செய்ய உதவினார். இன்று நாம் காண்கின்ற பரத நாட்டியக் கச்சேரி முறையினைச் சீர்செய்தவர்களும் இவர்கள் தான். இவர்கள் இயற்றிய பத வர்ணங்களுள் ஆனந்த பைரவி இராகத்தில் அமைந்த ''சகியே இந்த வேளையில்'' சங்கராபரண இராகத்தில் அமைந்த ''அதி மோகம் கொண்டேன்'' பைரவி இராகத்தில் அமைந்த ''மோகமான'' ஆகிய பத வர்ணங்களும் மந்தாரி, காபி, கமாஸ் கானடா, ஹிந்தோளம் ஆகிய இராகங்களில் இயற்றிய தில்லானாக்களும் பிரசித்தி வாய்ந்தவை. சிவானந்தத்தைத் தவிர, மற்றைய மூவருக்கும் மக்கட் பேறு கிடைக்கவில்லை.

நாட்டியக் கலைக்காகத் தமது வாழ்க்கையை அர்ப்பணித்த பொன்னையா அவர்கள் தமது அறுபதாவது வயதில் ஈசனடி சேர்ந்தார்.

**தேர்ச்சி 2.0 :- சூழலில் நாம் பார்த்து இரசித்தவற்றையும், வெவ்வேறு வகையான பாடல்களையும் அபிநயித்து ஆற்றுகைப் படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 2.2 :- பாரதியார் பாடலுக்கு அபிநயம் அமைத்து ஆற்றுகைப்படுத்துவார்.**

**செயற்பாடு 2.2.1 :-**

"காக்கைச் சிறகினிலே நந்தலாலா"
"ஓடி விளையாடு பாப்பா" எனும் பாடல்களைப் பாடி அபிநயிப்போம்.

**நந்தலாலா**

ராகம் : சிந்துபைரவி (யதுகுல காம்போதி)

தாளம் : ஆதி

இயற்றியவர் : சுப்பிரமணிய பாரதியார்.

காக்கைச் சிறகினிலே நந்த லாலா - நின்றன்
கரியநிறத் தோன்று தையே நந்த லாலா

பார்க்கும் மரங்க ளெல்லாம் நந்த லாலா - நின்றன்
பச்சை நிறத் தோன்று தையே நந்த லாலா

கேட்கு மொழியி லெல்லாம் நந்த லாலா - நின்றன்
கீத மிசைக்குதடா நந்த லாலா

தீக்குள் விரலை வைத்தால் நந்த லாலா - நின்னை
தீண்டு மின்பந் தோன்றுதடா நந்த லாலா.

### பாப்பா பாடல்

ஓடி விளையாடு பாப்பா - நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா - ஒரு
குழந்தையை வையாதே பாப்பா.

சின்னஞ் சிறுகுருவி போலே - நீ
திரிந்து பறந்துவா பாப்பா
வண்ணப் பறவைகளைக் கண்டு - நீ
மனத்தில் மகிழ்ச்சிகொள்ளு பாப்பா.

கொத்தித் திரியுமந்தக் கோழி - அதைக்
கூட்டி விளையாடு பாப்பா
எத்தித் திருடு மந்தக் காக்காய் - அதற்கு
இரக்கப் படவேணும் பாப்பா.

பாலைப் பொழிந்து தரும் பாப்பா - அந்தப்
பசுமிக நல்லதடி பாப்பா
வாலைக் குலைத்துவரும் நாய்தான் - அது
மனிதர்க்குத் தோழனடி பாப்பா.

வண்டி இழுக்கும் நல்ல குதிரை - நெல்லு
வயலில் உழுதுவரும் மாடு
அண்டிப் பிழைக்கும் நம்மை ஆடு - இவை
ஆதரிக்க வேணுமடி பாப்பா.

காலை எழுந்தவுடன் படிப்பு - பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு - என்று
வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா.

பொய்சொல்லக் கூடாது பாப்பா - என்றும்
புறஞ்சொல்ல லாகாது பாப்பா
தெய்வம் நமக்குத்துணை பாப்பா - ஒரு
தீங்குவர மாட்டாது பாப்பா.

பாதகஞ் செய்பவரைக் கண்டால் - நாம்
பயங்கொள்ள லாகாது பாப்பா
மோதி மிதித்துவிடு பாப்பா - அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா.

துன்பம் நெருங்கிவந்த போதும் - நாம்
சோர்ந்துவிட லாகாது பாப்பா
அன்பு மிகுந்த தெய்வ முண்டு - துன்பம்
அத்தனையும் போக்கிவிடும் பாப்பா.

சோம்பல் மிகக் கெடுதி பாப்பா - தாய்

சொன்ன சொல்லைத் தட்டாதே பாப்பா
தேம்பி யழுங்குழந்தை நொண்டி - நீ
திடங்கொண்ட போராடு பாப்பா.

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற - எங்கள்
தாயென்று கும்மியடி பாப்பா
அமிழ்தில் இனியதடி பாப்பா - நம்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா.

சொல்லில் உயர்வுதமிழ்ச் சொல்லே - அதைத்
தொழுது படித்திடடி பாப்பா
செல்வம் நிறைந்த ஹிந்துஸ் தானம் - அதைத்
தினமும் புகழ்ந்திடடி பாப்பா.

வடக்கில் இமயமலை பாப்பா - தெற்கில்
வாழும் குமரிமுனை பாப்பா
கிடக்கும் பெரியகடல் கண்டாய் - இதன்
கிழக்கிலும் மேற்கிலும் பாப்பா.

வேத முடையதிந்த நாடு - நல்ல
வீரர் பிறந்த திந்த நாடு
சேதமில் லாதஹிந்துஸ் தானம் - இதைத்
தெய்வமென்று கும்பிடடி பாப்பா.

சாதிகள் இல்லையடி பாப்பா - குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்
நீதி, உயர்ந்தமதி, கல்வி - அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்.

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மை யென்று தானறிதல் வேண்டும்.
வயிர முடைய நெஞ்சு வேணும் - இது
வாழும் முறைமையடி பாப்பா.

**தேர்ச்சி 4.0 :- தென் இந்திய சாஸ்திரிய நடனங்கள், இலங்கையின் சாஸ்திரிய, கிராமிய நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார்.**

**தேர்ச்சி மட்டம் 4.1 :- ஹஸ்தங்களையும் பேதங்களையும் அறிந்து கூறுவார்.**

**செயற்பாடு 4.1.1 :-**

- **தேவஹஸ்தம், நவக்கிரக ஹஸ்தம், ஜாதி ஹஸ்தங்களையும் அறிந்து கொள்வோம்.**

## தேவஹஸ்தம்

| | ஹஸ்தம் | இடது (L) | வலது ( R ) |
|---|---|---|---|
| 1 | பிரம்மா | சதுரம் | ஹம்ஸாசியம் |
| 2 | விஷ்ணு | திரிபதாகம் | திரிபதாகம் |
| 3 | சிவன் | சிம்ஹமுகம் | திரிபதாகம் |
| 4 | சரஸ்வதி | கபித்தம் | சூசி |
| 5 | லக்சுமி | கபித்தம் | கபித்தம் |
| 6 | பார்வதி | பதாகம் | பதாகம் |
| 7 | விநாயகர் | கபித்தம் | கபித்தம் |
| 8 | சண்முகன் | திரிசூலம் | சிகரம் |
| 9 | மன்மதன் | சிகரம் | கடகாமுகம் |
| 10 | இந்திரன் | திரிபதாகம் | திரிபதாகம் |
| 11 | அக்கினி | காங்கூலம் | திரிபதாகம் |
| 12 | யமன் | தாம்ரசூடம் | சூசி |
| 13 | நிருப்தி | கட்வா | சகடம் |
| 14 | வருணன் | சிகரம் | பதாகம் |
| 15 | வாயு | அர்த்தபதாகம் | அராளம் |
| 16 | குபேரன் | அலபத்மம் | முஷ்டி |

## நவக்கிரக ஹஸ்தம்

ஆதியும் அந்தமும் இல்லாத ஆண்டவன் எல்லாவற்றிற்கும் மூலமானவர். உலகத்துக்கெல்லாம் ஒரே கடவுள் என்றாலும் பல உப தெய்வங்கள் ஆண்டவனுக்குப் பிரதிநிதிகளாக இருந்து மக்களின் நன்மை, தீமைகளுக்குப் பொறுப்பு ஏற்கின்றார். அதைப் போலவே கிரகங்களும் தங்களுக்கு வெவ்வேறு தெய்வங்களை அதி தேவதைகளாகக் கொண்டுள்ளன. ஒரு கிரகம் தோஷம் பெறும் போது அந்தக் கிரகத்திற்குரிய அதிதேவதையை வணங்கித் தோஷ நிவர்த்தி பெறலாம்.

சிவன் கோயில்களில் நவக்கிரக சந்நிதி இருக்கும். நவக்கிரக வழிபாடு செய்வது என்பது பொதுவான பரிகாரம் ஆகும். அந்தந்தக் கிரகங்களுக்குத் தனித்தனியே சந்நிதியிருப்பதில்லை. பாரதத்தில் தனித்தனி சந்நிதிகள் உண்டு. இவ்வாறு மக்களுக்கு நன்மை தரும் கிரகங்களுக்கு ஸ்லோகங்களும் தனித்தனியாகக் காணப்படுகின்றன.

| ஹஸ்தம் | இடது | வலது |
|---|---|---|
| 1. சூரியன் (ஞாயிறு) | அலபத்மம் | கபித்தம் |
| 2. சந்திரன் (திங்கள்) | அலபத்மம் | பதாகம் |
| 3. செவ்வாய் (அங்காரகன்) | சூசி | முஷ்டி |
| 4. புதன் (புதக) | முஷ்டி | பதாகம் |
| 5. வியாழன் (குரு பிரகஸ்பதி) | சிகரம் | சிகரம் |
| 6. வெள்ளி (சுக்கிரன்) | முஷ்டி | முஷ்டி |
| 7. சனி | சிகரம் | திரிபதாகம் |
| 8. ராகு | சர்ப்பசிரஸ் | சூசி |
| 9. கேது | சூசி | அர்த்தபதாகம் அல்லது பதாகம் |

## ஜாதி ஹஸ்தம் (05 / 04)

| ஹஸ்தம் | இடது ( L ) | வலது ( R ) |
|---|---|---|
| 1. பிராமணர் | சிகரம் | சிகரம் |
| 2. ஷத்திரியர் | பதாகம் | சிகரம் |
| 3. வைசிகர் | ஹம்ஸாசியம் | கடாகாமுகம் |
| 4. சூத்திரர் | சிகரம் | மிருகஷீர்ஷம் |
| 5. ராஷதர் | ஷகடம் | ஷகடம் |

**தேர்ச்சி 4.0 :-** தென் இந்திய சாஸ்திரிய நடனங்கள், இலங்கையின் சாஸ்திரிய, கிராமிய நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.2 :-** பரதநாட்டியத்தின் அடிப்படை அடவுக்கட்குரிய இசைக்குறியீட்டினை அறிந்து கூறுவார்.

**செயற்பாடு 4.2.2 :-** தாஹத்தஜெம்தரிதா, திதிதெய், தெய் தெய் திதிதெய் அடவுகளைத் தாள அங்கக்குறியீட்டில் எழுதுவோம்.

## தாஹத்தஜெம்தரிதா - ரூபக தாளம்

| 0 | | $1_4$ | | | |
|---|---|---|---|---|---|
| 1வது அட்சரம் | 2வது அட்சரம் | 3வது அட்சரம் | 4வது அட்சரம் | 5வது அட்சரம் | 6வது அட்சரம் |
| 1ம் காலம் | | | | | |
| தா ;<br>ஜெம், ; | ஹத், த, /<br>த, ரி, / | ஜெம், ;<br>ஜெ, க, | த, ரி,<br>த, ரி, | தா ;<br>தெய், ; | ;; //<br>;; // |
| 2ம் காலம் | | | | | |
| தா ஹத் த | ஜெம், த ரி / | தா ; | ஜெம், த ரி | ஜெ க த ரி | தெய், ; // |
| 3ம் காலம் | | | | | |
| தா ஹத் த<br>ஜெம் த ரி | தா<br>ஜெம் த ரி / | ஜெ க த ரி<br>தெய், | தா ஹத் த<br>ஜெம் த ரி | தா<br>ஜெம் த ரி | ஜெ க த ரி<br>தெய், // |

## தாஹத்தஜெம்தரிதா - ரூபக தாளம்

## தெய் தெய் திதி தெய் தா - நாட்டியச் சொற்கட்டு

| 0 | | $1_4$ | | | |
|---|---|---|---|---|---|
| 1வது அட்சரம் | 2வது அட்சரம் | 3வது அட்சரம் | 4வது அட்சரம் | 5வது அட்சரம் | 6வது அட்சரம் |
| **1ம் காலம்** | | | | | |
| தெய், ;<br>தெய், ; | தெய், ; /<br>தெய், ; / | தி, தி,<br>தி, தி, | தெய், ;<br>தெய், ; | தா ;<br>தா ; | ;; //<br>;; // |
| **2ம் காலம்** | | | | | |
| தெய், தெய், | திதி தெய், / | தா ; | தெய், தெய், | திதி தெய், | தா ; // |
| **3ம் காலம்** | | | | | |
| தெய் தெய்<br>திதி தெய் | தா<br>தெய் தெய் / | திதி தெய் தா | தெய் தெய்<br>திதி தெய் | தா<br>தெய் தெய் | திதி தெய்<br>தா // |

# திதிதெய் 1, 2 - ஆதி தாளம்

| $1_4$ | | | | 0 | | 0 | |
|---|---|---|---|---|---|---|---|
| 1வது<br>அட்சரம் | 2வது<br>அட்சரம் | 3வது<br>அட்சரம் | 4வது<br>அட்சரம் | 5வது<br>அட்சரம் | 6வது<br>அட்சரம் | 7வது<br>அட்சரம் | 8வது<br>அட்சரம் |
| **1ஆம்<br>காலம்** | | | | | | | |
| தி, தி, | தெய் , ; | தி, தி, | தெய் , ; / | தி, தி, | தெய் , ; / | தி, தி, | தெய் , ; // |
| **2ஆம்<br>காலம்** | | | | | | | |
| திதி தெய், | திதி தெய், | திதி தெய், | திதி தெய், / | திதி தெய், | திதி தெய், / | திதி தெய், | திதி தெய், // |
| **3ஆம்<br>காலம்** | | | | | | | |
| திதி தெய்<br>திதி தெய் | திதி தெய்<br>திதி தெய் | திதி தெய்<br>திதி தெய் | திதி தெய்<br>திதி தெய்/ | திதி தெய்<br>திதி தெய் | திதி தெய்<br>திதி தெய்/ | திதி தெய்<br>திதி தெய் | திதி தெய்<br>திதி தெய்// |

# தெய் தெய் திதிதெய் - ஆதி தாளம்

| $1_4$ | | | | 0 | | 0 | |
|---|---|---|---|---|---|---|---|
| 1வது<br>அட்சரம் | 2வது<br>அட்சரம் | 3வது<br>அட்சரம் | 4வது<br>அட்சரம் | 5வது<br>அட்சரம் | 6வது<br>அட்சரம் | 7வது<br>அட்சரம் | 8வது<br>அட்சரம் |
| **1ஆம்<br>காலம்** | | | | | | | |
| தெய், ; | தெய் , ; | தி, தி, | தெய் , ; / | தெய் , ; | தெய் , ; / | தி, தி, | தெய் , ; // |
| **2ஆம்<br>காலம்** | | | | | | | |
| தெய்,<br>தெய், | திதி தெய், | தெய்,<br>தெய், | திதி<br>தெய், / | தெய்,<br>தெய், | திதி தெய், / | தெய்,தெய், | திதி தெய், // |
| **3ஆம்<br>காலம்** | | | | | | | |
| தெய் தெய்<br>திதி தெய் | தெய் தெய்<br>திதி தெய் | தெய்<br>தெய்<br>திதி<br>தெய் | தெய்<br>தெய் திதி<br>தெய் / | தெய்<br>தெய்<br>திதி<br>தெய் | தெய் தெய்<br>திதி தெய் / | தெய்<br>தெய் திதி<br>தெய் | தெய் தெய்<br>திதி தெய் // |

**தேர்ச்சி 5.0 :- நடனங்களின் கலாசாரப் பண்பாட்டு, வரலாற்றுப் பின்னணியை அறிந்து கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 5.2 :- நாட்டிய நாடகங்களின் பின்னணியை அறிந்து கூறுவார்.**

**செயற்பாடு 5.2.1 :- நாட்டிய நாடகங்களின் பின்னணியை அறிந்து கொள்வோம்.**

## நாட்டிய நாடகம்

நாட்டியத்தின் வாயிலாக ஒரு நாடகத்தை நடத்திக் காட்டுவதற்கு நாட்டிய நாடகம் என்று பெயர். இதில் ஒரு கதையின் கருத்தை அபிநயம் பிடித்து விளக்கப்படுகிறது. இதில் நிருத்தம், நிருத்தியம், அபிநயம் ஆகிய மூன்று அம்சங்களும் நிறைந்து காணப்படும். இதில் நடிக்கும் ஒவ்வொரு உறுப்பினரும் முதன்முதல் மேடையில் தோன்றும் போது பிரவேசத் தருவுக்கு ஏற்ற வகையில் ஆடவேண்டும். பிரவேசத் தருவில் நடனம் செய்வதற்கேற்ற எத்துக்கடை ஸ்வரங்கள் அமைக்கப்பட்டிருக்கும். இதில் கதையின் முழு அம்சத்தையும் எடுத்துக்காட்டும் வகையில் இதன் பாடல்களில் கருத்துக்கள் அமைந்திருக்கும். அந்தக் கருத்துகளின் உணர்வுகளை முகபாவங்கள் கை, கால் மற்றும் அங்க அசைவுகள் மூலம் பல்வேறு ஒப்பனைகளுடன் நடித்துக்காட்டப்படும். இதில் இயல், இசை, நாடகம் மூன்றும் அமைந்திருப்பதைக் காணலாம்.

இதில் பாத்திரங்களுக்கேற்றவாறு சடை, ஒப்பனை, அலங்காரம் செய்து காலில் சலங்கை கட்டி ஆடுவர். இதனைச் சதிராட்டம், சின்னமேளம், தாசியாட்டம், பரதநாட்டியம் என்றெல்லாம் அழைப்பதுண்டு. இதில் கிராமிய இசைமெட்டுக்களும் ஜதிகளும் அமைந்திருக்கும். இதன் கதை அம்சங்கள் ஒரு வாழ்க்கையைச் சித்தரிப்பதாகவோ ஒரு அரசன் அல்லது ஜமீன்தார் பற்றியோ அமைந்திருக்கும். காதல், வீரம், சோகம், பிரிவு போன்ற பல உணர்வுகள் மனதைத் தீண்டும்படியாக அமைந்திருக்கும். இதற்கு நல்ல உதாரணமாக ‘‘குறவஞ்சி’’ நாட்டிய நாடகத்தைச் சொல்லலாம். நாட்டிய நாடகத்தில் பெண்களே நடித்துக் காட்டுவர். ஆண் வேடத்தைப் பெண்களே ஏற்று நடிப்பர். இந் நாடகத்தில் பல்வேறு இசைக்கருவிகள் பயன்படுத்தப்படும். பல நாட்டிய நாடகத்தை மெலட்டூர் வெங்கடராம சாஸ்திரி தெலுங்கில் இயற்றியுள்ளார். கவிக்குஞ்சரபாரதி தமிழில் ‘‘அழகர்குறவஞ்சி’’ என்ற சிறந்த நாட்டிய நாடகத்தை இயற்றியுள்ளார். மற்றும்

1. திருக்குற்றாலக் குறவஞ்சி
2. கும்பேசர் குறவஞ்சி
3. விராலி மலை குறவஞ்சி
4. தியாகேசர் குறவஞ்சி
5. குமாரலிங்க குறவஞ்சி
6. செந்தில் குறவஞ்சி
7. தமிழரசி குறவஞ்சி
8. சரபேந்திரபூபால குறவஞ்சி
9. பெத்லாம் குறவஞ்சி

போன்ற பல்வேறு நாட்டிய நாடகங்களும் இயற்றப்பட்டுள்ளன. மற்றும் இதில் வீதி நாடகங்களும் ‘‘யக்சகான’’ என்ற நாட்டிய நாடகங்களும் உள்ளன. தியாகராஜரின் பாட்டனாராகிய ‘‘கிரிராஜகவி’’ என்பவர் சில ‘‘யக்சகான’’ நாட்டிய நாடகங்களை இயற்றியுள்ளார்.

**தேர்ச்சி 4.0 :- தென் இந்திய சாஸ்திரிய நடனங்கள், இலங்கையின் சாஸ்திரிய நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார்.**

**தேர்ச்சி மட்டம் 4.3 :- பரதநாட்டியத்தின் எண்ணக் கருக்களை அறிந்து கூறுவார்.**

**செயற்பாடு 4.3.2 :- சபை, சபாமண்டபம் சபாநாயகன், அலாரிப்பு இலட்சணம், கிண்கிணி இலட்சணம் ஆகியவற்றின் எண்ணக் கருக்களை அறிந்து கொள்வோம்.**

**சபா லஷணம் (சபை வணக்கம்)**

வேதங்கள் கொம்புகளாய் மேலாரும் சாத்திரங்கள்
தாதுகள்வி ளங்குமலர்த் தாருகளாய் - நீதமுடன்
கற்றோரே தும்பிகளாய்க் கண்டசபா கற்பகத்தைப்
போற்றுவேன் என்பாய் புகழ்ந்து

வேதங்கள் கிளைகளாகவும் சாத்திரங்கள் மலர்களாகவும் கற்றோர்கள் தும்பிகளாகவும் அமைந்த சபா கற்பக விருஷத்தைப் புகழ்ந்து வணங்குவேன்.

**சபையின் தன்மை (சபா லஷணம்)**

சத்தியம், ஒழுக்கம், அறம், குணம், கீர்த்தி, மறைமொழிகள் சார்தல், நியமம், எத்திசை மன்னர்களும் புகழ்தல், வேதாந்தம், வீணை, ஞானம், கவி இலக்கணம், சவுரியம், மன்னர் நிறைந்திருத்தல், உண்மை ஒத்தல், பக்தி. இப் பதினைந்தும் நிறைந்த இடமே சபை என்று நூல்கள் கூறும்.

### சபா மண்டப இலஷணம்

உரையரங் கத்தில் வடக்குமுகத் திலேனும்
உற்றகீழ் முகத்திலேனும் துலங்குகின்ற
அரியா சனத்திற் சபாபதி யிருக்க
அலங்கரித் தவன்தேவி யிடத்திருக்க
பெருவலத் திலமைச்சன் வலமிடத் திக்கற்ற
பேரான கவிகா யகாளிருக்க
பிரகரு திற்புவி யரசர்நின் றிருத்தல்
பெற்றியாம் சபாமண் டபத்தின் சீரே!

அரங்கத்தின் வடக்கு முகத்திலேனும் கிழக்கு முகத்திலேனும் விளங்குகின்ற சிம்மாசனத்தின் மீது சபாபதி இருக்க அவன் தேவி அலங்காரங்களுடன் இடப்பக்கத்தில் இருக்க, வலப்பக்கத்தில் அமைச்சனும் வலமிடங்களில் கவிகாயகர்களுமிருக்க மற்ற புவியரசர்கள் நின்றிருத்தல் சபாமண்டபத்தின் சீராகும்.

### சபாநாயகன் லஷணம்

சீமான் சகல சாஸ்திர முணர்ந்தவன்
காலசோதனை தெரிந்த நிபுணன்
தீம்பா வமற்ற வன், நற்குணம், தயவு, சத்
தியவாக் விதட்சண முளான்
பூமான், பிரசன்னமுகன், தருமசிந்தனை, கீர்த்தி
பொறுமைஆ தரவை உடையோன்
புண்ணியர் யாவரும் மதித்திடும் ஈகை
யான், புகழ்சௌர்ய ஞான உசிதன்
சேமவான், கீத வாத்ய நிருத்தம்
சுத்த தேசியத்தியல் பறிந்தோன்
செய்ய சரசம் பொறுமை வேடிக்கை
தனில் நினைவு சென்றகன நயவிலாசன்
காமன்நேர் அழகுடையன், ஊகமுடையோன்
இலக்கணம் இலக்கியம் அறிந்தோன்
கனவான் தராதரம் அறிந்த சதுரன்
சபைக்கு அதிபன் என்றோதும் நூலே./

ஸ்ரீமான், சகல சாஸ்திரம் உணர்ந்தவன். கலாசோதனை தெரிந்த நிபுணன், தீயபாவம் அற்றவன், நற்குணம், தயவு, சத்தியவாக்கு, தாஷணியம் இவற்றை உடையவன். பூமான், பிதசன்னமுகன், தருமசிந்தனை, கீர்த்தி, பொறுமை, ஆதரவு இவற்றை உடையோன். புண்ணியன், ஈகையாளன், புகழ், சௌர்யம், ஞானம் இவற்றில் சிறந்தவன். பிறரைக் காக்கும் நற்குணமுடையவன். கீதம் பொருந்திய இசையின் மேன்மை அறிந்தவன். சரசம், பொறுமை, வேடிக்கை இவற்றில் மனம் செலுத்தும் கன நய விலாசமுடையவன், காமனை ஒத்த அழகு உடையவன், யூகமுடையவன், இலக்கண இலக்கியம் அறிந்தவன், கனவான், தராதரம் அறிந்த சதுரன் இத்தகையோன் சபைக்கு அதிபன் ஆவான் என்று நூல்கள் கூறும்.

## அலாரிப்பு இலட்சணம்

அலர் என்ற சொல் தமிழில் மலர்வது என்று பொருள்படும். தன் உடலை மலராக நினைத்து அதனைக் கடவுளுக்கு அர்ப்பணம் செய்வதுபோல் அமைக்கப்பட்டுள்ளது. உருப்படிகள் வரிசையில் இது அரம்ப நிகழ்ச்சியாக விளங்கும். இது நிருத்த உருப்படியாகும். குரு, தெய்வம், சபையினர் என்போருக்கு அஞ்சலி செலுத்தும் உருப்படியாகும். அபிநயங்கள் இன்றி ''தாம் திதா தெய் ததெய்'' என்னும் சொற்கட்டுக்கு விளம்ப. மத்திம, துரித காலங்களில் இடம்பெறுகின்றது. இவ்வுருப்படி நாட்டை இராகத்திலும் திஸ்ர ஏக தாளத்திலும் அமைந்தள்ளது. நாட்டியத்திற்குரிய அங்க. பிரத்தியாங்க, உபாங்கங்களால் தாளக் கட்டுக்கோப்புக்குள் அமைந்த உருப்படியாகும். இது மரபுவழி வந்த ஓர் உருப்படியாகும். அலாரிப்பு திஸ்ர, சதுஸ்ர, கண்ட, மிஸ்ர, சங்கீரண நடைகளிலும் இடம்பெறுகின்றது.

## கிண்கிணி லஷணம்

சுஸ்வராஸ்ச ஸுருபாக்ஷ ஸுஷ்மா நஷ்த்ர தேவதாஹ //
கிங்கிணியஹ காம்ஸ்யரசிதா ஏகைகாங்குலி காந்தரம் //
பந்தீயான்னீல சூத்ரேண க்ரந்திபிஸ்ச த்ருடம் புனஹ //
ஷதத்வயம் ஷதம்வாபி பாதயோர் நாட்யகாரணி //

**கருத்து** :

சின்னஞ்சிறிய சலங்கைகளாக இருத்தல் வேண்டும். வெண்கலம், செம்பு, வெள்ளி இம் மூன்றுள் ஏதேனும் ஒன்றால் சுரங்கள் ஒலிக்கும்படி அழகாகச் செய்யப்படும். கிங்கிணிக்கு ''தாராகணம்'' (நட்சத்திரக் கூட்டம்) அதி தெய்வமாகும். இதனை கறுப்பு அல்லது நீலக்கயிற்றினால் ஒவ்வொரு அங்குல இடைவெளி விட்டு உறுதியாய் முடிப்புப் போட வேண்டும். காலொன்றுக்கு இருநூறுவீதம் கச்சை கட்டி அணிவது நல்லது. அல்லது வலது காலில் நூறும் இடது காலில் நூறுமாகக் கட்டி ஆடலாம். தற்காலத்தில் சுமார் ஐம்பது அறுபது கிண்கிணிகளைத் தோலில் வைத்து அணியும் வழக்கம் நிலவி வருகிறது.

ஆனால் வடநாட்டில் கதக் நடனம் ஆடுபவர்கள் கயிற்றில் நூற்றுக்கு மேல் கிண்கிணிகளைக் கட்டி அணிவதைக் காணலாம்.

வெண்கலம் செம்பு மற்ற வெள்ளியிம் மூன்றில் ஒன்றால்
பங்கிய நஞ்சு ரங்கள் பலுகவே அழகாய்ச் செய்த
கிண்கிணி தனக்குத் தாரா கணம் அதி தெய்வ மாங்க
ருங்கயி றதனிற் கோத்திட்டுறுதியாய் முடிச்சைப் போடே/

வெண்கலம், செம்பு, வெள்ளி இம் மூன்றினுள் ஒன்றால் கிண்கிணி செய்யப்படும். இதற்கு அதிதெய்வம் தாராகணம். அதனைக் கடுப்புக் கயிற்றால் கோத்து உறுதியாய் முடிச்சுப்போட வேண்டும்.

கருது மக் கெச்சந் தன்னைக் காற்கு இருநூறு வீதம்
பெருகவே அணிவாய், அல்லால் வலக்காலில் நூறு பூட்டி
மருவிய இடக்கால் தன்னில் இருநூறுமாகக் கட்டி
அருமையாய் நடனஞ் செய்தல் ஆமெனப் பகரு மாதோ.

காலொன்றுக்கு இருநூறு வீதம் கச்சை கட்டி அணிவது நல்லது. அல்லது வலக்காலில் நூறும் இடக்காலில் நூறும் இருநூறுமாகக் கட்டி ஆடலாம்.



**தேர்ச்சி 4.0 :-** தென் இந்திய சாஸ்திரிய நடனங்கள், இலங்கையின் சாஸ்திரிய, கிராமிய நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.2.3 :-** பரதநாட்டியத்தின் அடிப்படை அடவுகட்குரிய இசைக்குறியீட்டினை அறிந்து கூறுவார்.

**செயற்பாடு 4.2.3 :-** மண்டியடவு, ததிங்கிணதொம் அடவுகளைத் தாள அங்கக்குறியீட்டில் எழுதுவோம்.

## மண்டியடவு 1, 2 - ரூபக தாளம்

| 0 | | $1_4$ | | | |
|---|---|---|---|---|---|
| 1வது<br>அட்சரம் | 2வது<br>அட்சரம் | 3வது<br>அட்சரம் | 4வது<br>அட்சரம் | 5வது<br>அட்சரம் | 6வது<br>அட்சரம் |
| 1ம் காலம் | | | | | |
| தாங்கிடு | தத், த, / | தின், ன, | தாங்கிடு | தத், த, | தின், ன, // |
| 2ம் காலம் | | | | | |
| தாங்கிடு<br>தத் த | தின் ன<br>தாங்கிடு / | தத் த<br>தின் ன | தாங்கிடு<br>தத் த | தின் ன<br>தாங்கிடு | தத் த<br>தின் ன // |
| 3ம் காலம் | | | | | |
| தாங்கிடு<br>தத் த<br>தின் ன<br>தாங்கிடு | தத் த<br>தின் ன<br>தாங்கிடு<br>தத் த / | தின் ன<br>தாங்கிடு<br>தத் த<br>தின் ன | தாங்கிடு<br>தத் த<br>தின் ன<br>தாங்கிடு | தத் த<br>தின் ன<br>தாங்கிடு<br>தத் த | தின் ன<br>தாங்கிடு<br>தத் த<br>தின் ன // |

# ததிங்கிணதொம் - ரூபக தாளம்

| 0 | | $1_4$ | | | |
|---|---|---|---|---|---|
| 1வது அட்சரம் | 2வது அட்சரம் | 3வது அட்சரம் | 4வது அட்சரம் | 5வது அட்சரம் | 6வது அட்சரம் |
| **1ம் காலம்** | | | | | |
| த, திங்,<br>தொம், ; | கி, ண, /<br>த, க, / | தொம், ;<br>தி, கு, | த, க,<br>த, திங், | த, திங்,<br>கி, ண, | கி, ண, //<br>தொம், ; // |
| **2ம் காலம்** | | | | | |
| ததிங் கிண | தொம், தக / | ததிங் கிண | தொம், தக | திகு ததிங் | கிண<br>தொம், // |
| **3ம் காலம்** | | | | | |
| ததிங்கிண<br>தொம் தக | ததிங்கிண<br>தொம் தக / | திகுததிங்<br>கிண<br>தொம் | ததிங்கிண<br>தொம் தக | ததிங்கிண<br>தொம் தக | திகுததிங்<br>கிண<br>தொம் // |

## ததிங்கிணதொம் - ரூபக தாளம்

## தெய் திதி தெய் தெய் தெய் திதி தெய் தெய் தெய் தெய் திதி தெய் - நாட்டியச் சொற்கட்டு

| 0 | | $1_4$ | | | |
|---|---|---|---|---|---|
| 1வது அட்சரம் | 2வது அட்சரம் | 3வது அட்சரம் | 4வது அட்சரம் | 5வது அட்சரம் | 6வது அட்சரம் |
| **1ம் காலம்** | | | | | |
| தெய், ;<br>தெய், ; | தி, தி, /<br>தெய், ; | தெய், ;<br>தெய், ; | தெய், ;<br>தெய், ; | தெய், ;<br>தி, தி, | தி, தி, //<br>தெய் , ; // |
| **2ம் காலம்** | | | | | |
| தெய், திதி | தெய், தெய், / | தெய், திதி | தெய், தெய், | தெய், தெய், | திதி<br>தெய், // |
| **3ம் காலம்** | | | | | |
| தெய் திதி<br>தெய் தெய் | தெய் திதி<br>தெய் தெய் / | தெய் தெய்<br>திதி<br>தெய் | தெய் திதி<br>தெய் தெய் | தெய் திதி<br>தெய் தெய் | தெய் தெய்<br>திதி<br>தெய் // |

**தேர்ச்சி 5.0 :- நடனங்களின் கலாசாரப் பண்பாட்டு வரலாற்றுப் பின்னணியை அறிந்து கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 5.3 :- இலங்கையின் பாரம்பரிய நடனத்தின் கலாசாரப் பின்னணியை அறிவார்.**

**செயற்பாடு 5.3.1 :- இலங்கையின் பாரம்பரிய நடனமான கண்டிய நடனத்தைப் பற்றி அறிவோம்.**

## கண்டிய நடனம்

சிங்கள மக்களின் பாரம்பரியக் கலையானது அவர்களது கிராம சமூக வாழ்க்கையின் ஒரு பகுதியாகும். இக் கலையானது பாரம்பரியக் கலை, உபயோகக் கலை, அழகுக்கலை என மூன்றாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதில் உபயோகக் கலை என்பது அடிப்படைத் தேவைக்கேற்றபடி உருவாக்கப்பட்டது. உதாரணமாக மட்பாண்டக்கலை, பின்னற்கலை போன்றவற்றைக் கூறலாம். அழகுக்கலை என்பது மக்களின் அழகுணர்வால் உருவாக்கப்பட்டவை. இவ் அழகுக்கலை இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. உயர்மட்டமாக நுண்கலைக் காவியம், சாஸ்திரிய சங்கீதம், ஓவியக்கலை என்பனவும் தாழ்ந்த மட்டமாகக் கிராமவாசிகளின் கலைகளும் ஆகும். இக் கிராமவாசிகளின் கலையானது சமயம் தொடர்பான சடங்கு நடனங்களாகும்.

இலங்கை வாழ் சிங்கள மக்களின் சாஸ்திரிய நடனங்களாகவும் பாரம்பரிய நடனங்களாகவும் பின்வரும் நடனங்கள் காணப்படுகின்றன.

1. கண்டிய நடனம் - உடறட்ட நட்டும் (மலைப்பிரதேச நடனம்)
2. றுகுணு நடனம் - பஹத்தரட்ட நட்டும் (கரையோரப் பிரதேச நடனம்)
3. சப்ரகமுப நடனம்- சப்ரஹமுப நட்டும் (சபரகமுவ நடனம்)

இலங்கையின் வடக்கு, கிழக்கு தவிர்ந்த மற்றைய பகுதிகளில் தமது செல்வாக்கினை நிலைநாட்டி நிற்கும் நடனம் கண்டிய நடனமாகும். இந் நடனம் இலங்கையின் மத்திய மாகாண மலை நாடாகிய கண்டியில் தோன்றியதால் இந் நடனத்தைக் கண்டிய நடனம் எனவும் அழைக்கின்றார்கள்.

முற்காலத்தில் மலைநாட்டு ராஜஸ்தானியாக விளங்கிய கந்த உடபஸ்ரட என்ற பகுதியில் ஹரிஸ்பத்துவ, மாநுவர, சதரகோரலய, ஹேவா ஹெட்ட, உடுநுவர, யட்புநுவர ஆகிய இடங்களில் தான் இந் நடனம் ஆடப்பட்டு வளர்க்கப்பட்டுள்ளது.

கண்டியைச் சேர்ந்த விற்பன்னர்களால் தமது சொந்தமொழி கலை, கலாச்சார, சமூக, சமயப் பண்பாடுகளுடன் கூடி இந் நாட்டியக்கலை வளர்க்கப்படுகிறது.

மேலும் இந்த உடரட்ட நடனத்தில் வண்ணம், வெஸ், நையாண்டி, உடக்கி, பந்தேரு ஆகியவை சாஸ்திரிய சம்பந்தமான நடனங்கள் ஆகும்.

''கொஹோம்பகங்காரிய'' எனும் சடங்கு முறையுடன் இணைந்த வகையில் இந் நடனம் பிரசித்தமாய் இருந்தது. கொஹோம்பகந்காரிய எனும் இச் சடங்கு நிகழ்வானது ''கொஹோம்ப'' என்னும் தெய்வத்தை முதன்மைப்படுத்திச் செய்யப்படும் ஓர் சமயச் சடங்கு முறை ஆகும். பிற்காலத்தில் இக் கண்டிய நடனமானது மங்கள நிகழ்வுகளில் ஆடப்படும் நடனம், பேய் பிசாசுகளை விரட்டுவதும் சாந்தி செய்வதுடன் இணைந்த சடங்கு நடனமாகவும் இரு பிரிவுகளில் நடைபெறுகிறது.

வெஸ் நடனம் என்பது ஊர்வலங்களிலும் கடல் அரங்கங்களிலும் பௌத்தக் கோயில்களிலும்

கிரிகைகளிலும் ஆங்காங்கே பயன்படுத்தப்பட்டு வரும் ஓர் ஆடற்கலை அம்சமாகும்.

நையாண்டி நடனம் என்பது தமிழரின் நையாண்டி மேளத்தை நினைவுபடுத்தும் நடனமாகும். இந் நடனம் பெரும்பாலும் கடல் அரங்க நடனமாக ஆங்காங்கே காணமுடிகின்றது.

உடக்கி நடனம் என்பது சிவபெருமானின் கையிலுள்ள உடுக்கினை நினைவுபடுத்துகிறது. இந் நடனம் அரங்கங்களைப் பெரிதும் அலங்கரிக்கும் நடனமாகும்.

பந்தேரு நடனம் என்பது பந்தேரு என்னும் வாத்தியத்தைப் பயன்படுத்தி ஆடுவதாகும். இந் நடனம் அரங்கங்களைப் பெரிதும் அலங்கரிக்கும் ஆடல் வடிவமாகும். வண்ணம என்னும் நடனமும் அரங்கங்களில் பெரிதும் அலங்கரிக்கும் ஆடல் வடிவங்களாகத் திகழ்கின்றன.

மேலும் வண்மை நடனம் என்பது தமிழில் உள்ள வண்மை என்னும் சொல்லிலிருந்து வந்ததாகக் கூறப்படுகிறது. இவ் வண்ணங்கள் 18 வகைப்படும். அவையாவன,

| | | |
|---|---|---|
| 1. கஜக வண்ணம் | - | யானையின் அசைவு |
| 2. அனுமான் வண்ணம் | - | குரங்கின் சேட்டைகள் |
| 3. மயூர வண்ணம் | - | மயிலினை வர்ணித்து ஆடல் |
| 4. உதாரஹ வண்ணம் | - | அரச வம்சத்தைச் சேர்ந்தவர்கள் உலாவருவதைக் குறிக்கும். |
| 5. சவுளா வண்ணம் | - | சேவலைப் பற்றியது |
| 6. வைரோடி வண்ணம் | - | சிவலோகத்தைக் குறிப்பது |
| 7. நையடி வண்ணம் | - | பாம்பின் அசைவினைக் குறிப்பது |
| 8. சிங்கராஜ வண்ணம் | - | சிங்கம் ஆண்மயில் ஏமாற்றப்பட்ட கதையினைச் சித்தரிப்பது. |
| 9. துரக வண்ணம் | - | கண்டக குதிரையைப் பற்றியது |
| 10. அஸத்ருஸ வண்ணம் | - | கௌதமபுத்தரைப் போற்றிப் புகழ்வது |
| 11. ஈரடி வண்ணம் | - | போர் வீரனின் வீரபராக்கிரமச் செயல் பற்றியது |
| 12. ஸூரபதி வண்ணம் | - | இந்திரனைப் போற்றி ஆடுவதாக இருக்கும். |
| 13. காறக வண்ணம் | - | சங்கினைப் பற்றிய வர்ணனை |
| 14. உக்குஸா வண்ணம் | - | பருந்துகள் காற்றிலே பறந்து வருவதைக் குறிக்கும் நடனம் |
| 15. உரக வண்ணம் | - | நாகபாம்பின் வாழ்க்கை சித்தரிக்கப்படும் |
| 16. முசலடி வண்ணம் | - | முயலின் பாச்சலையும் பயந்த சுபாவத்தையும் குறிக்கும். |
| 17. கிரளா வண்ணம் | - | கிரளா பறவையின் ஒலி அசைவு பற்றியது |
| 18. கணபதி வண்ணம் | - | விநாயகக் கடவுளின் அருள்வேண்டி ஆடுவது |

அநேகமாக மலையகத்திலும் தென்பகுதியிலும் விழாக்களிலும் ஆடப்படும் நடனமாகும். இது சிங்களவர்களுக்குரிய கலையாகும். ஒருவர் அல்லது பலர் மத்தளங்களை அடிக்க ஒருவர் அன்றிப் பலர் கூட்டமாக நின்று ஆடும் ஆட்டமாகும். சில வேளைகளில் மத்தளம் அடிப்பவரும் ஆடுபவருடன் சேர்ந்து ஆடி அடிப்பதைக் காணலாம். கண்டிய நடனம் ஆடப்படுவது இடத்திற்கு இடம் சிறிது வேறுபட்டாலும் நடனத்திற்குரிய ஒழுங்குமுறை கையாளப்படுகிறது. பெரும்பாலும் சிறுவர்களுக்குரிய நடுத்தர வயது உடைய பெண்களும் ஆண்களும் ஆடுவதைக் காணலாம்.

கண்டிய நடனத்தின் பாத நிலையை ''மண்டிய'' என்பர். இது பரத நாட்டியத்தின் ''அங்கப்ரமரி''யினை ஒத்தது. இரு கால்களையும் அடவு அரைமண்டியில் இருந்து கைகளை நெஞ்சிற்கு முன்னால் அரைவட்டமாக வைத்தும் அர்த்த சந்திரன் முத்திரையினை இரு கைகளிலும் பிடித்தவாறு மேலும் கீழுமாக முன், பின் பக்கமாக எனக் கைகளை அசைத்து ஆடுவார். ஆடும்போது வலது காலில் தொடங்கி இடது காலில் முடிப்பர்.

இந் நடனத்தில் நிருத்தம், நிருத்தியம், நாட்டியம் எனும் மூன்று பிரிவுகளும் காணப்படுகின்றது. ஆயினும் நிருத்தத்திற்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

இந் நடனத்தின் பிரதான தாள வாத்தியம் ‘‘கெள்ள பெரய’’ (புயவவய டீநசயலய) எனும் தோல் வாத்தியமாகும். இவ் வாத்தியத்தை உடரட்டபெர எனவும் அழைப்பர். இவ் வாத்தியத்தை நடனம் தொடங்கி முடியும்வரை பயன்படுத்துகின்றனர். சல்லாரி, புல்லாங்குழல், கொம்பு வாத்தியம் என்பனவும் பாவிக்கப்படுகின்றது.

இந் நடனத்தின் உடையலங்காரம் வெள்ளை. சிவப்பு நிறங்களில் அமைந்திருக்கும். அரையில் மெத்த இறுகிய உடை அணிந்தும் தலை, கைகள், மார்பு என்பவற்றை அலங்கரித்த நிலையாலும் இந் நடனம் ஆடப்படுகின்றது. அணிகலன்கள் வெள்ளியில் செய்யப்பட்டிருக்கும். மணிகளினால் செய்யப்படும் மார்புக் கவசமும் தலையில் ‘‘வெஸ்’’ என அழைக்கப்படும் தொப்பியினையும் அணிந்து ஆடுவார். பந்தேரு உடுக்கி நடனத்திற்கு தலையில் விசிறி மடிப்புடன் வெள்ளைத் தலைப்பாகையும் கட்டுவார்கள்.

இந் நடனத்தின் சிறப்பம்சம் கால்களை உயர்த்தும் போதும் இடுப்பு மூட்டிலிருந்து காலுயரச் செல்லுதல், பாய்தல் (சுறல்) பக்க அசைவு, சுற்றுதல் ஆகியவை ஆகும்.

இந் நடனம் கதகளி நடனத்தை அடிப்படையாகக் கொண்டது. ஆரம்பத்தில் கண்டிய நடனமானது சமயச் சடங்குகளில் கோவில்களிலும் ஆடப்பட்டு வந்தது. காலப்போக்கில் அவைக்காற்றுகைக் கலையாக இது உயர்நிலையை அடைந்திருப்பதைக் காணமுடிகிறது.

.